# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024.

Prosecution witness for P.W. 13.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.ஆகாஷ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருவாரூரில் குடியிருந்து JCB ஆப்ரேட்டராக தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன ஆர்.கே.துரையை கேள்விப்பட்டுள்ளேன். சியாமளா பெட்ரோல் நிலையத்திற்கு சொந்தமான கல்குவாரியில் நான் JCB ஆப்ரேட்டராக வேலை செய்து வந்தேன். அ.சா.11 அதன் உரிமையாளர். 01.04.2024 அன்று காலையில் மேற்படி பெட்ரோல் நிலையத்திற்கு பின்புறமாக குவாரிக்கு காலை 7.30 மணிக்கு வேலைக்கு சென்றேன். மாலை 4 மணிக்கு திரும்பி வந்தேன். அப்போது பெட்ரோல் நிலையத்தில் ஒரு அறையில் 1, 3 எதிரிகள் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள். 1ம் எதிரி கைபேசியில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். அப்போது 1ம் எதிரி 3ம் எதிரியிடம் 3ம் எதிரியின் வாகனத்தை யாரோ கேட்பதாக சொன்னார். 3ம் எதிரி பேட்டரி வீக்காக இருப்பதாக சொன்னார். நான் அறையை விட்டு வெளியே வந்துவிட்டேன். நான் JCB இயந்திரத்திற்கான ரீடிங் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வெளியில் எடுத்து வந்து அ.சா.11 இடம் கொடுத்துவிட்டு அறைக்கு எதிரில் இருந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது 1, 3 எதிரிகள் வெளியே வந்தார்கள். 1ம் எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு எங்கோ சென்றார். எனக்கு அருகில் 3ம் எதிரி உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்போது 3ம் எதிரியிடம் எதற்கு வண்டியை கேட்கிறார்கள்

என்றும், ஏன் பேட்டரி வீக்காக இருப்பதாக சொன்னீர்கள் என்றும் கேட்டேன். யாரோ பெண் கொடுத்த மாமனாரை அடிக்க வேண்டுமாம் என்று சொன்னார். அதனால் பல கோடி ரூபாய் லாபம் என்றும் சொன்னார். அதற்கு ஏன் வண்டியை வைத்து அடிக்கிறீர்கள் என்று கேட்டேன். அதை விபத்து வழக்காக மாற்ற வேண்டும் என்பதற்காக வண்டியை கேட்கிறார்கள் என்று சொன்னார். அவ்வாறு செய்தால் 3ம் எதிரிக்கு ரூபாய் 15 லட்சம் லாபம் என்றும் சொன்னார். சும்மா சொல்லாதீர்கள் என்று சொன்னேன். மாமனாருக்கு மருமகன் ரூபாய் 3 கோடி கொடுக்க வேண்டுமாம் என்றும் 3ம் எதிரி சொன்னார். நான் வண்டியை கொடுக்கப் போகிறீர்களா என்று கேட்டேன். இருந்தால் இருக்கிறோம் வாழ்ந்தால் வாழ்கிறோம் என்றும் 3ம் எதிரி சொன்னார். அப்போது 1ம் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டார். 1ம் எதிரி 3ம் எதிரிக்கு பணம் கொடுத்தார். 1ம் எதிரி 3ம் எதிரியிடம் போலீசுக்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள் என்று கேட்டார். 1 ம் எதிரி 3ம் எதிரியிடம் இரண்டு மாதங்கள்தான் வண்டி ஓட்டியதாகவும், நாள் வாடகைக்கு 1ம் எதிரி வண்டியை எடுத்துச் சென்றதாக சொல்லிவிடுவேன் என்று 3ம் எதிரி சொன்னார். 3ம் எதிரி அடித்தால் அடித்துக்கொள், இடித்தால் இடித்துக் கொள் என்று சொன்னார். ஆனால் சம்பவ இடத்தில் வாகனம் நிற்கக்கூடாது என்றும் சொன்னார். பேசிக் கொண்டிருக்கும்போதே இருவரும் டாரஸ் லாரியை எடுக்கச் சென்றுவிட்டார்கள். அந்த வண்டிக்கு 1ம் எதிரி டீசல் போட்டார். பிறகு கோவில்பட்டி சாலையில் எட்டையபுரம் நோக்கி லாரியில் சென்றார். 3ம் எதிரி இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டி நோக்கி சென்றுவிட்டார். 20 நிமிடம் கழித்து எட்டையபுரத்திலிருந்து கோவில்பட்டி நோக்கி வண்டி வேகமாக சென்றது. சிகேடி பள்ளி அருகில் விபத்து நடந்ததாக இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் சொன்னார். லாரி அடித்து இழுத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். அப்போதுதான் 1, 3 எதிரிகள் சொன்னதை நிறைவேற்றி விட்டார்கள் என்பது எனக்கு தெரியும். 06.04.2024 அன்று போலீசார் என்னை விசாரிக்க பெட்ரோல் நிலையம் வந்தார்கள். அப்போதுதான் போலீசாரிடம் மேற்படி சங்கதிகளை சொன்னேன். எனக்கு பிரச்சனை வரும்

என்ற பயத்தினால் அதற்கு முன்பாக நான் யாரிடமும் சொல்லவில்லை. கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 முன்பாக மேற்படி சங்கதிகளைத்தான் வாக்குமூலமாக சொன்னேன். 3ம் எதிரி அவரது வீட்டில் பிரச்சனை என்று ஆறு மாதங்களாக பெட்ரோல் நிலையத்தில் என் அறையில்தான் தங்கினார். 1ம் எதிரியை அவரது வாகனத்திற்கு டீசல் போடுவதற்காக வரும்போது எனக்கு பழக்கம். பின்னிட்டு மேற்படி விபத்தில் இறந்துபோனதாக சொல்லப்படும் நபரின் பெயர் ஆர்.கே.துரை என்பது விசாரித்து தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் சொந்த ஊர் திருவாரூர். திருவாரூருக்கும் மேற்படி பெட்ரோல் நிலையத்திற்கும் சுமார் 350 கி.மீ தூரம் இருக்கும். Hitachi வாகனத்தை இயக்குவதற்கு தனியாக உரிமம் பெற வேண்டுமென்றால் சரிதான். நான் Hitachi வாகனத்தை இயக்குவதற்கு திருவாரூரில் பழகினேன். சரியாக பழகவில்லை என்பதால் எட்டையபுரத்திற்கு வந்து பழகினேன். எட்டையபுரத்திற்கு வந்து மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு சுமார் ஒரு வருடம் பழகினேன். Hitachi வாகனத்தை ஓட்டி பழகுவதற்கு உரிமையாளர் யாரும் வாகனத்தை கொடுக்கமாட்டார்கள். மேற்படி வாகனத்தை இயக்குவதற்கு தனியாக ஆட்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர் பெயர் ராசு. தற்போது இருந்து சுமார் 8, 9 மாதங்களுக்கு முன்பு நான் எங்கள் ஊருக்கு போய்விட்டேன். சம்பவத்திற்கு பிறகும் நான் இரண்டு மாதங்கள் எட்டையபுரத்தில் இருந்தேன். பிறகு எங்கள் ஊருக்கு போய்விட்டேன். நான் ஊருக்கு போனபிறகு சாட்சி சொல்ல வரவேண்டுமென்று தகவல் போலீசார் சொன்னார்கள். இப்போதிருந்து சுமார் 5, 6 நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். நேற்று இரவு எட்டையபுரத்திற்கு வந்துவிட்டேன். எங்கள் ஊரில் நான் Hitachi வாகனம் ஓட்டுவதில்லை விவசாயம் செய்கிறேன். மேற்படி குவாரி மேற்படி பெட்ரோல் நிலையத்திற்கு பின்புறமாக சுமார் 500 மீட்டர் தூரத்தில் உள்ளது. குவாரி அருகில் பெட்ரோல் பங்க் வைக்கக்கூடாது என்பது எனக்கு தெரியாது. நான் எட்டையபுரத்தில்

சம்பவத்திற்கு பிறகு இரண்டு மாதங்களாக இருந்தபோது சம்பவம் குறித்து யாரிடமும் சொல்லவில்லை. எனக்கு திருமணம் ஆகவில்லை. எங்கள் வீட்டிற்கு கூட மேற்படி சம்பவம் குறித்து நான் சொல்லவில்லை. குவாரியில் உள்ள ஆட்களுக்கும் நான் சொல்லவில்லை. பெட்ரோல் நிலைய ஊழியர்களிடமும் நான் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. நான் Hitachi ஓட்டுநரே அல்ல என்றும், எனக்கு உரிமமும் இல்லை என்றும், நான் பிரதான ஓட்டுநருடன் கிளினராக செல்பவர் என்றும் சொன்னால் சரிதான். நான் ஊரில் இருக்கும்போது ஆய்வாளர் முருகன் எனக்கு சாட்சி சொல்ல வேண்டுமென்று தகவல் சொன்னார். நான் நேற்று காவல்நிலையம்தான் சென்றேன். போலீசார் சாட்சி சொல்வதற்காகத்தான் என்னை அழைத்ததாக சொன்னார்கள். எப்படி சாட்சி சொல்ல வேண்டுமென்று போலீசார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் போலீசார் அழைத்துதான் சென்றேன். போலீசார் எனக்கு உணவு வாங்கி கொடுத்தார்கள். காவல்நிலையத்திலேயே தங்கிக் கொள்ளும்படி சொன்னார்கள். போலீசார் என்னை கையோடு காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றம் அழைத்து வந்தார்கள். நானும், போலீசாரிடம் வழக்கு பற்றி கேட்டுக்கொள்ளவில்லை, போலீசாரும் என்னிடம் வழக்கு பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரிந்ததை பயப்படாமல் நீதிமன்றத்தில் சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். அதனால் பெட்ரோல் நிலையத்தில் நான் பார்த்ததை யாருக்கும் சொல்லாமல் இன்றுதான் நீதிமன்றத்தில் முதல்முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். 1ம் எதிரி 3ம் எதிரியிடம் ரூபாய் 15 லட்சம் கொடுத்தாரா என்றால் பணத்தை மடித்துக் கொடுத்தார், எவ்வளவு கொடுத்தார் என்று தெரியாது. 1, 3 எதிரிகள் பேசிக் கொண்டது குறித்து அதற்கு பிறகு நான் அவர்களிடம் எதுவும் கேட்டுக் கொண்டதில்லை. பெட்ரோல் நிலையத்தில் தங்குவதற்கு ஒரே அறைதான் உள்ளது. 3ம் எதிரியின் வீடு மேற்படி பெட்ரோல்நிலையத்திலிருந்து சுமார் 25 கி.மீ தள்ளி உள்ளது என்றால் சரிதான். 1 ம் எதிரியின் வீடு பெட்ரோல்நிலையத்திலிருந்து சுமார் 40 கி.மீ தள்ளி உள்ளது

என்றால் சரிதான். 1ம் எதிரி தனியாக குவாரிக்கு லாரி ஓட்டி வருகிறார் என்றால் சரிதான். 3ம் எதிரியின் லாரிக்கு 1ம் எதிரி ஓட்டுநர் அல்ல என்றால் சரிதான். மேற்படி அறையில் தங்குவதற்கு 3ம் எதிரிக்கு பெட்ரோல் நிலைய உரிமையாளர் அனுமதி அளித்தாரா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்திற்கு பிறகு 3ம் எதிரி பெட்ரோல் நிலையத்திற்கு வரவில்லை. நான் சம்பவ இடத்திற்கு போய்பார்க்கவில்லை. பெட்ரோல்நிலையத்திலிருந்து சம்பவ இடம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சம்பவ இடம் எனக்கு தெரியாது. மேற்படி குவாரிக்கு வரும் லாரிகள் மட்டும்தான் பெட்ரோல் நிலையத்தில் இருக்கும். எங்கள் குவாரிக்கு 3ம் எதிரியின் லாரி ஓடவில்லை. பெட்ரோல் நிலையம் முன்பாக உள்ள சாலை கிழமேலாக உள்ளது. சாலைக்கு தென்புறமாக பெட்ரோல் நிலையம் உள்ளது. நான் Hitachi ஓட்டுநர் அல்ல என்றும், நான் மேற்படி பெட்ரோல்நிலைய ஊழியர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.6–ஐ எனக்கு தெரியும். அவரும் கல், மண் ஏற்றம் லாரி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் குவாரி வைத்திருந்தார். நான்மேற்படி பெட்ரோல் நிலையத்தில் வேலை செய்ததாகவும், 1, 3 எதிரிகள் அங்கு வந்ததாகவும் மேற்படி வீதம் அவர்கள் பேசிக் கொண்டதாகவும் போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் 1, 3 எதிரிகளை குறித்து சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக் கொடுத்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் நேற்றைய தேதியில் காவல்நிலையத்தில் வைத்து எனக்கு சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.24 19:31:23 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.